அது கூட இல்லை

இரண்டாவது முறை இறப்பது
அத்தனை எளிதானதல்ல

இரண்டாவது முறை
இறப்பதற்கு முன்
இரண்டாவது முறையாக
பிறர் நம்பும்படி
வாழ்ந்தாக வேண்டியுள்ளது

பிறர் நம்பும்படி சிரிக்கவும்
பிறர் நம்பும்படி பேசவும்
பிறர் நம்பும்படி அன்பு செலுத்தவும்
வேண்டியுள்ளது.

இரண்டாவது முறை இறக்கையில்
நம்மைச்சுற்றி உள்ளவர்கள்
அழாமல் போகும்
அபாயம் உண்டு

இன்னும் கொடூரமாய்
சிலர்
நமது மூன்றாவது மரணம்
இன்னும் எப்படி நேர்த்தியாக
அமையலாம்
என்பது பற்றி
உரையாடத் தொடங்கலாம்...

மிக முக்கியமாய்
இரண்டாவது மரணத்தில்
நாமே நாம் இறப்பதைப் பற்றி
கவலை படாமல் போகலாம்.

ம.நவீன்